# கனடா காரை கலாச்சார மன்றம்

## Canada - Karai Cultural Association


A non-profit corporate body in Ontario-Reg. No: 1100492
P O BOX 32057 MILLIKEN CROSSING PO MARKHAM, ON, M1V 0E1 .
E-mail: **karainagar@gmail.com** www.karainagar.com **Tel: 416-642-4912**



**Acting Executive Committee**
President
Mr. Raj V. Rajendram
Secretary
Mr. Ravi Raveendran
Treasurer
Mr. Kanaga Sivakumaran

**Patron Committee**

Mr. Raj V. Rajendram
Mr. Ravi Raveendran
Mr. Kanaga sivakumaran
Mr. Ampalavanar Kandappu
Mr. Thiruvather Tharmarajah


**கா**ரை நலன் புரி சங்கம் –பிருத்தானியா கால் நூற்றாண்டினை கடந்து காலடி எடுத்து வைக்கின்றது என்ற செய்தி கேட்டு ஒவ்வொரு காரை மண்ணை நேசிக்கும் அன்பு நெஞ்சங்களும் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் பெருமை கொள்ள வேண்டும்.

ஸ்ரீ லங்காவினை விட்டு தமிழ் மக்கள், பாரிய அளவில் இடம் பெயர்தல் தொடங்க முன்பே காரைநகர் மக்களும் உலகின் எல்லா பகுதிகளிலும் பரந்து வாழ்ந்து வந்தமை அனைவரும் அறிந்த விடயமாகும். ஆனால் 83 ம் ஆண்டு நமது தாய் நாட்டில் ஏற்பட்ட பாரிய வன்முறைக்கு பின்பு நமது மக்களும் உலகெலாம் சிதறி ஓடினார்கள். சென்றடைந்த நாடுகளில் ஒன்று கூடி ஒருங்கு சேர்ந்து ஒற்றுமையாய் வாழ தொடங்கினார்கள். சிதறிய முத்துகள் ஒன்று சேர்ந்து உருவான ஆரங்கள் பல. இன்று அவை அனைத்தும் நமது காரை மாதாவின் கழுத்தினை அலங்கரிக்கின்றன. அவற்றில் தனக்கென நிகரிலா ஒளி வெள்ளம் சிந்தும் மறுவிலா மாணிக்கமோ , இல்லை மரகதமோ என வியத்தகு தரத்தில் காரைத் தாயின் கழுத்தினை அலங்கரிக்கும் முத்து மணி ஆரம் தான் காரை நலன் புரி சங்கம் –பிருத்தானியா.

இன்று இவர்கள் 25ம் நிறைவு விழா கொண்டாடும் நேரமதில் கனடா காரை கலாச்சார மன்றத்தின் சார்பில் எமது வாழ்த்துகளை தெரிவிப்பதில் பெரு மகிழ்வு கொள்ளுகின்றோம்.

இவர்களின் சேவைகள் இனிதே தடையின்றி தொடரவும், கால் நூற்றாண்டு விழா களை கட்டவும் எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர சிவகாமி அம்மை சமேத சிதம்பரநாதன் பாத மலர் பணிகின்றோம்

இவ் வண்ணம்
***கனடா காரை கலாச்சார மன்றம்***

**வே. இராசேந்திரம்**
போஷகர் சபை இணைப்பாளரும்
பதில் தலைவரும்.

***ஒன்று பட்டால் உண்டு வாழ்வு !***